# மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre

*Mobile: 0449 892 066*

*Email :*mtdruitttsc@gmail.com *Web :* www.mtsc.org.au

# பேச்சுப் போட்டி 2021

## ஆண்டு 8/9 (HSC Focus)

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம்
இன்றைய நன்னாளில் என்னுரை ஏற்றிட்ட தலைப்பு

## பொழுதுபோக்குச் சாதனங்கள்

பொழுது போக்கு என்பது வெறும் வார்த்தை அல்ல. மனித வாழ்வின் முக்கிய அம்சம். பிரதான பாகம். வாழ்வியல் தேவை. ஓடியோடி வேலை செய்து களைப்படையும் மனிதன் கிடைத்திடும் பொழுதினை மகிழ்வுடன் கழித்திட உதவிடும் சாதனங்கள் பொழுது போக்குச் சாதனங்கள். ஆடிப் பாடி விளையாடி கூத்தாடிக் களித்தல் என்பன முற்காலப் பொழுது போக்கு.

நாட்கள் நகர, விஞ்ஞானி கண்டுபிடித்தான், தொழில் நுட்பவியலாளன் சாதனமாக்கினான். மனிதனின் பொழுது போக்கிற்கும் சாதனங்கள் உருவாகின. இவை பத்திரிகை, சஞ்சிகை, புத்தகம், வானொலி என விரிவாக்கம் பெற்றன. இவற்றின் மூலம் பொழுதினைப் போக்கவும், உலகினை அறியவும், வாழ்க்கையை நுகரவும், இரசனையுடன் வாழவும் மனிதன் கற்றுக் கொண்டான்.

அதன் பின் திரைப்படங்கள் உருவாகின. மனிதனை முழுமையாக ஆக்கிரமித்துப் பொழுதைப் போக்க அவை உதவின. கண்டுபிடிப்புகள் தொடர்ந்தன. தொலைக்காட்சிப்பெட்டி வந்தது. உயிரோட்டமான இலத்திரனியல் பொழுதுபோக்கும் கிடைத்தது. வீட்டிலிருந்தவாறு உலகினைக் காணும் வாய்ப்பும் வந்தது. கற்களைத் தேய்த்து இலகு சாதனம் இயற்றிய மனிதன், அணுவை இயக்கி சாதனம் அமைத்து விளையாடும் இலத்திரனியல் யுகமிது.

இன்று நாமும் இலத்திரனியல் உபகரணங்களுடன் பொழுது களிக்கின்றோம் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி. வணக்கம்.



ஆக்கம்: ஆசிரியர் திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன்

பேச்சுப் போட்டி எதிர்வரும் 29.05.2021 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.